	தி/கிண்/ரீ.பி. ஜாயா மகளிர் மகா வித்தியாலயம் **முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020** **புவியியல்**	**தரம்** **10**
சுட்டெண்:		**நேரம் : 03 மணித்தியாலயம்**

முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020 முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020 முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020

பகுதி - I

- **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. சேர்க்கையின் அடிப்படையில் புவித் தொகுதியின் உபதொகுதிகள் ..... ஆகும். (இரண்டு / மூன்று / நான்கு)
2. புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ..... மீற்றர்களாகும்.
   (510 மில்லியன் km^2/ $510km^2$ / $5510km^2$)
3. வளிமண்டலத்தில் நைதரசன் வாயுவின் அளவு ..... ஆகும்.
   (78.08% / 78.0% / 79.09%)
4. புவியில் ..... சதவீதம் நீர்ப்பரப்பு காணப்படுகின்றது?
   (29%/ 28% / 29.2%)
5. கண்ட ஓடு ..... பாறைகளினால் உருவாக்கப்பட்டுள்ளது.
   (பசோல்ட் / கிரனைட்/ கருங்கல்)
6. புவி மையத்தின் ஆழம் ..... ஆகும்.
   (6370km / 6373km / 65510 km)
7. இலங்கை அமைந்துள்ள புவித்தகடு ..... ஆகும்.
   (தென் அமெரிக்கா / யுரேசியன் தகடு / இந்து அவுஸ்திரேலியா தகடு)
8. முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கடல் ..... ஆகும்.
   (செங்கடல் / கஸ்பியன் கடல்/ சீனக்கடல்)
9. தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் ..... கூடிய கவனம் செலுதி வருகின்றது.
   (இந்தியா / இலங்கை/ சீனா)
10. இலங்கையில் 1:50000 இடவிளக்கப்படங்களின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள படத்தாள்களின் ஒன்றின் பரப்பளவு ..... ஆகும். ($1000km^2$/$4000km^2$/$1500km^2$)

www.ikedu.lk

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சரியாயின் "ச" யையும் "பி" யையும் சுற்றி வட்டம் வரைக.**

11. உயரத்திற்கு ஏற்ப வெப்பநிலை குறைவடைந்து செல்வது மாறன் மண்டலத்தின் முனைப்பான பண்பாகும். (ச / பி)
12. 1:50000 இடவிளக்கப்படங்களில் 2cm தூரம் 1km என குறித்துக் காட்டப்படும். (ச / பி)
13. றொக்கீஸ் மலைத் தொடர் தென்னமெரிக்காக் கண்டத்தில் அமைந்துள்ளது. (ச / பி)
14. நீரினால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பு முனை எனப்படும். (ச / பி)
15. புவியின் மொத்த நிலத் திணிவில் 1% இனை ஓடு கொண்டுள்ளது. (ச / பி)

- **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என இரண்டு பகுதிகளிலுமுள்ள விடயங்களை பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. புவியின் வளிமண்டலத்தில் பிரதான படைகள் சில **அ** நிரலிலும் அவற்றின் மேல் எல்லைகள் **ஆ** நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றினை பொருத்தினால் கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்க.

அ	ஆ
1. மாறன் மண்டலம்	A - 50
2. படை மண்டலம்	B - 80
3. இடை மண்டலம்	C - 20

(1) ABC (2) CBA (3) CAB (4) BCA (……)

17. **அ** பகுதியில் உலகில் காணப்படும் நதிகளும் **ஆ** பகுதியில் உற்பத்தியாகும் இடங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றினை பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை

அ	ஆ
1. தேம்ஸ் நதி	A - ஏரியிலிருந்து
2. நைல் நதி	B - மலைப்பகுதி ஊற்றிலிருந்து
3. மகாவலி நதி	C - ஊற்றிலிருந்து

(1) ABC (2) CAB (3) BCA (4) ACB (……)

www.ikeu.lk

18. **அ** பகுதியில் உலகின் காலநிலை வலயங்களும் **ஆ** பகுதியில் அதன் அகலக் கோட்டு அமைவிடமும் தரப்பட்டுள்ளன. இதன் சரியான விடை

அ	ஆ
1. அயன வலயம்	A - வட அகலக்கோடு $66½^{o}$ தென் அகலக் கோடு $66½^{o}$
2. இடைவெப்ப வலயம்	B - $66½^{o}$ இல் இருந்து வடமுனைவு தென் முனைவு வரை
3. முனைவு வலயம்	C - கடகக் கோடு $23½^{o}$ மகரக்கோடு $23½^{o}$

(1) ABC (2) BCA (3) CBA (4) CAB (……)

19. **அ** பகுதியில் உலகில் காணப்படும் சமுத்திரங்களும் **ஆ** பகுதியில் அதில் அமைந்துள்ள தீவுகளும் தரப்பட்டுள்ளன. இதன் சரியான விடை

அ	ஆ
1. அத்திலாந்திக் சமுத்திரம்	A - யப்பான்
2. இந்து சமுத்திரம்	B - கியுபா
3. பசுபிக் சமுத்திரம்	C - இலங்கை

(1) CBA (2) BCA (3) BCA (4) ACB (……)

20. **அ** பகுதியில் உலகின் விவசாய நிலப்பயன்பாடு **ஆ** பகுதியில் அவற்றுக்குப் பொருத்தமான மண் வகைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான விடை

அ	ஆ
1. நெல்	A - சேணாசம் மண்
2. கோதுமை	B - வண்டல் மண்
3. இறப்பர்	C - கபுக் கலந்த செம்மண்

(1) ACB (2) BAC (3) ACB (4) BCA (……)

- **20-30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

21. புவியின் கற்கோளமானது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையில் மிகவும் மெதவாக நகரும் பல்வேறு ..... கொண்டமைந்துள்ளது.
22. $23½^{o}$ தன் அகலக்கோடு ..... என அறியப்படும்.
23. படங்களின் பாகுபாட்டின்படி ஒரு குறிப்பிட்ட விடயத்தினைக் காட்டுவதற்கு மட்டும் வரையப்படும் படங்கள் ..... எனப்படும்.
24. தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் ..... கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.
25. உலகில் நெற்பயிர்ச் செய்கையில் ..... முன்னிலை வகிக்கின்றது.
26. நீண்டகாலத்திற்கு தொடர்ச்சியாக அறுவடை செய்யக் கூடிய பயிராக ..... கணப்படுகிறது.
27. ஆபிரிக்காக் கண்ட மேடைக்குள் ..... தீவு அமைந்துள்ளது.

www.ikeu.lk

28. கண்ட மேடையின் விளிம்பிலிருந்து சமுத்திரத்தை நோக்கிச் சாய்வாக அமைந்துள்ள நிலப்பகுதி ..... எனப்படும்.
29. உலகில் மிகப் பெரிய தீவு ..... ஆகும்.
30. புவியின் மொத்த நிலப்பரப்பில் ..... சதவீதம் நிலமாகும்

- **31-40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. கண்ட ஓடு கொண்டிருப்பது
    (1) சிலிக்கேற்றுக்கள் (2) எரிமலைக் குழம்புப் பாறை
    (3) கருங்கற் பாறைகள் (4) மக்னீசியம் (.....)
32. ஓசோன் படை அமைந்திருக்கும் வளிமண்டலப் படை
    (1) மாறன் மண்டலம் (2) படை மண்டலம்
    (3) இடை மண்டலம் (4) வெப்ப மண்டலம் (.....)
33. உலகின் மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலம்
    (1) பமீர் (2) தீபெத் (3) மொங்கோலியன் (4) பீ (.....)
34. மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலம்
    (1) மலைத் தொடர் (2) மேட்டு நிலம்
    (3) சமவெளிகள் (4) சாய்வுகள் (.....)
35. தென்னமெரிக்காக் கண்டத்தில் அமைந்துள்ள மலைத் தொடர்
    (1) றொக்கி (2) அந்தீஸ் (3) அப்லினைன் (4) அல்ப்ஸ் (.....)
36. 1:50 000 அளவுத்திட்டத்தின் படி 2cmx2cm சதுரமான பகுதியின் உண்மையான பரப்பளவு எத்தனை km^2 ஆகும்.
    (1) $4km^2$ (2) $8km^2$ (3) $1km^2$ (4) $2km^2$ (.....)
37. இடவிளக்கப் படத்தாள் ஒன்றில் காட்டப்படும் நிலப்பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர கிலோ மீற்றர் ஆகும்.
    (1) 1000 km^2 (2) 2000 km^2 (3) 100 km^2 (4) 4000 km^2 (.....)
38. தேயிலைப் பயிர்ச் செய்கையில் முன்னிலை வகிக்கும் நாடு
    (1) இந்தியா (2) யப்பான் (3) தாய்லாந்து (4) சீனா (.....)
39. உலகின் பிரதான நெல் உற்பத்தி நாடுகளில் வட அமெரிக்காவில் நெல் உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற பிரதேசம்
    (1) மறேடாலிங் நதிப்பள்ளத்தாக்கு (2) கிழக்குக்கரை
    (3) சக்ரமன்ரோ நதிப்பள்ளத்தாக்கு (4) போ நதிப்பள்ளத்தாக்கு (.....)
40. இலங்கை அமைந்துள்ள பிரதான புவித்தகடு
    (1) இந்திய அவுஸ்திரேலியத் தகடு
    (2) யூரேசியன் தகடு
    (3) ஆபிரிக்கத் தகடு
    (4) பிலிபைன்ஸ் தகடு (.....)

www.ikeu.lk

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. அ) பின்வரும் விடயங்களை உலகப்புற உருவப்படத்தில் குறித்துக் காட்டுக.

- இந்து சமுத்திரம்
- செங்கடல்
- வடகடல்
- இலங்கை
- சுமாத்திரா தீவு
- பிரித்தானியா தீவு
- அற்லஸ் மலை
- சைபீரிச் சமவெளி
- அமேசன் நதி
- விக்டோரியா ஏரி

(10 புள்ளிகள்)

ஆ) i. தேசப்படம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii. தற்போது பயன்படுத்தப்படும் நவீன பட வரைகலையியல் நுட்ப முறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. a) கருப்பொருள் படம் என்றால் என்ன?

b) கருப்பொருள் படங்களின் பயன்பாடுகள் மூன்று குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

02. i. கற்கோளம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii. கற்கோளத்தின் பயன்பாடுகுள் 3 குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. கற்கோளத்தினை பாதிப்படையச் செய்யும் மனித நடவடிக்கைள் மூன்றைக் குறிப்பிட்டு இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

03. i. புவியில் நீர்க் கோளத்தில் காணப்படும் நீரின் பல்வேறு வடிவங்களில் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. நீரியல் வட்டச் செயன் முறையினை சுருக்கமாக தருக. (03 புள்ளிகள்)

iii. நீர்க் கோளத்தினை பாதிப்படையச் செய்யும் மனித நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

04. i. காலநிலை என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii. உலகில் பிரதான காலநிலை வலயங்களை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. நீர் மேலே குறிப்பிட்ட காலநிலை வலயங்களின் ஏதாவதொன்றின் சிறப்பம்சங்களை குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

05. i. உலகில் ஆசியாவிற்கு வெளியில் நெல் பயிரிடப்படும் நாடுகள் இரண்டு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. உலகில் நெற்பயிர்ச் செய்கைக்கு சாதகமான பௌதீக காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. உலகில் விவசாய நிலப்பயன்பாடானது முக்கியம் பெற்று விளங்குவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்கு. (05 புள்ளிகள்)

www.ikedu.lk